# ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா

# திருவழிபாடு ஆண்டு - A

# 2023-05-21

*(இன்றைய வாசகங்கள்:*

*திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்* 1: 1-11,

*திருப்பாடல்* 7: 1-2. 5-6. 7-8 ,

*திருத்தூதர் பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 1: 17-23,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 28: 16-20)

*திருப்பலி முன்னுரை*

"*இதோ! உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்.*"

*விண்ணகத்துக்குரியவர்களே, ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றப் பெருவிழா திருப்பலிக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகிறோம். மரணத்தை வெற்றி கொண்டு உயிர்த்தெழுந்த இறைமகன் இயேசு, நாற்பது நாட்கள் தனது சீடர்களை சந்தித்து உறுதிபடுத்திய பின்பு விண்ணேற்றம் அடைகிறார். இந்த உலகை விட்டு செல்லும் முன், எந்நாளும் நம்மோடு இருப்பதாக அவர் வாக்களித்திருக்கிறார். தந்தையாம் இறைவனின் மாட்சிக்காக, தூய ஆவியாரின் துணையோடு கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ நாம் அழைக்கப்படுகிறோம். முதல் கிறிஸ்தவர்களைப் போன்று, ஆண்டவரின் மாட்சியை உலகெங்கும் பறைசாற்ற நினைவூட்டப்படுகிறோம். கிறிஸ்து இயேசுவின் அதிகாரத்தை பயன்படுத்தி மக்கள் அனைவரையும் அவரது சீடர்களாக்கும் ஆர்வத்துடன் பணியாற்ற, இத்திருப்பலியில் நாம் வரம் வேண்டுவோம்.*

## *விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அன்பின் ஊற்றே இறைவா,*

*திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமது திருமகனின் உயிர்ப்பு, விண்ணேற்றம் ஆகியவற்றின் நற்செய்தியை உலக மக்கள் அனைவருக்கும் வழங்க உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*அன்பு பொழிபவரே இறைவா,*

*மண்ணக இன்பங்களுக்கு அடிமையாகி, விண்ணக வாழ்வைப் பற்றிய சிந்தனையின்றி வாழ்கின்ற மக்கள் அனைவரும், உமது திருமகனின் உயிர்ப்பிலும், விண்ணேற்றத்திலும் உம்மைக் கண்டுணர உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*புதுமைகளின் நாயகரே இறைவா,*

*எங்கள் ஆண்டவர் இயேசு விண்ணுலகிலும் மண்ணுலகிலும் கொண்டிருக்கும் அதிகா ரத்தால், உலக மக்களின் உடல், உள்ள, ஆன்ம நோய்களை குணமாக்கும் பணியை திருச் சபை ஆர்வமாக செய்ய உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*மாட்சியுறும் செயல்களைப் புரிகின்ற தந்தையே இறைவா!*

*உமது மக்களாகிய நாங்கள் ஒவ்வொரு வரும் எம்மைக் கட்டிவைத்திருக்கும் பாவம், சுயநலம், பிரிவினை, பொறாமை, பகைமை போன்ற அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை பெற்று அன்புறவு வாழ்வுக்குள் உயிர்த்தெழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அனைவரினதும் நலனில் அக்கறை கொண்ட தந்தையே!*

*இன்று இத்திருப்பலியில் பங்கு கொள்ள முடியாமல் நோயுற்றிருப்போர், சிறைகளிலும், வதை முகாம்களிலும் இருப்போர், அகதிகள் முகாம்க ளில் இருப்போர், பல்வேறு வேலைத்தளங்களில் பணியாற்றுவோர், பயணம் செய்வோர் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்களும் இன்றைய நாளின் மகிழ்வையும், ஆசீரையும் பெற்று மகிழச் செய் தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!*

*உலகில் ஏற்படும் மாற்றங்கள் எங்கள் நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்து, எங்கள் உள்ளங்களைக் கலக்கமடையச் செய்கின்றபோது நாம் நிலை குலைந்து போகாமல், உமது வாக்குறுதிகள் நிறைவேறும் என்பதில் உறுதியோடு காத்திருக்கும் நல்லுள்ளத்தை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

4. *அன்புத் தந்தையே இறைவா!*

*உலகப் பற்றினால் உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்து வாழும் இளைஞர்கள் நீரே ஆண்டவர், நீரே கடவுள் என்பதை உணர்ந்து உம்மில் புதிய வாழ்வைக் காண மனமாற்றம் பெற வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*